

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.7.2025) சென்னை தியாகராயர் நகரில் நடைபெற்ற முரசொலி நாளிதழின் கணக்காளர் திருமதி ஜி.புஷ்பராணி – எல். கிளமெண்ட் ராஜ் தம்பதியினரின் மகன் கி.ஆலன் எட்வின் ராஜ் – ஆ.ரேஷ்மா இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு. முரசொலி நாளிதழின் பொதுமேலாளர் எஸ்.ராஜசேகரன் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ அவர்கள் சந்தித்து பேசினார்.

### நீலகிரி மாவட்டத்தில், மாவட்ட அளவிலான

# வளர்ச்சி ஒருங்கிணைப்பு - கண்காணிப்புக் குழுக் கூட்டம்!

## நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா தலைமையில் நடைபெற்றது!

நீலகிரி, ஜூலை, 4–

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா தலைமையில், அரசு கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலை யில் நேற்று முன்தினம் (02.07.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நீலகிரி, கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு, தங்களது துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட திட்டங்கள் குறித்தும் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், தூய்மை இந்தியா திட்டம், ஜல் ஜீவன் மிஷன், பிரதான் மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்), கலைஞர் கனவு இல்லம், ஊரக பகுதிகளில் பழுதடைந்த வீடுகளை சீரமைத்தல், பழங்குடியினருக்கு வீடுகள் கட்டும் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்;டம், நமக்கு நாமே திட்டம், பொது நூலக கட்டிடங்கள், பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம், நபார்டு திட்டம், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டம், ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம், நபார்டு திட்டத்தின் கீழ் புதிய பள்ளி கட்டிடம் கட்டுதல், 15வது நிதிக்குழு மானியத்தின்கீழ் சுகாதார கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய திட்டங்களின்கீழ்; நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சம்மந்தப்பட்ட துறைச் சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பேரூராட்சிகள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம், தோட்டக்கலைத் துறை, சமூக பாதுகாப்புத்திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்; உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்;டங்கள் குறித்து அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நீலகிரி மாவட்டத்தில், நடைபெற வேண்டிய மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கடந்த இரண்டு நிதியாண்டுகளாக தமிழக அரசாலும், ஒன்றிய அரசாலும் வழங்கப்பட்ட திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில் 95 சதவீதம் பணிகள் நீலகிரி மாவட்டத்தில் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க உரிய அறிவுரைகள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மாவட்டத்தின் வளர்ச்சி பணிகள் திருப்திகரம் என்பதை விட பாராட்டதலுக்குரியதாக உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்த போது, புதியதாக கட்டப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, மருத்துவ கல்லூரி மற்றும் விடுதிக்கு குடிநீர் வேண்டி கோரிக்கை வைக்கப்பட்டது. இக்கோரிக்கையினை உடனடியாக ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23 கோடி ரூபாய் செலவில் மருத்துவக்கல்லூரி மற்றும் விடுதிகளின் பயன்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான ஆணை பிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பிலும், எனது சார்பிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நடைபெற்ற மாவட்ட அளவிலான மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டத்தில், நடைபெற்று வரும் பணிகளை மழைக்காலங்களுக்கு முன்பாக முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும், சரியான முறையில் திட்டமிட்டு வளர்ச்சி திட்ட பணிகளை முடிக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்.

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

# பொறியாளர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் பதவிக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

*மதுரை, ஜூலை 4-*

*மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணியின் ஒன்றிய, நகர, பேரூர், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பதவிக்கான நேர்காணல் வருகிற 6ந்தேதி நடைபெற உள்ளதாக வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார், அதன்விபரம்*



*கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, கழக மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா வழிகாட்டுதலின்படி, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் கலை கார்த்திகேயன் முன்னிலையில், மதுரை வடக்கு மாவட்டத்தில் உள்ள மதுரை கிழக்கு, மேலூர், சோழவந்தான் மற்றும் மதுரை மேற்கு தொகுதியில் உள்ள ஒன்றியம், நகரம், பகுதி மற்றும் பேரூர் கழகம், வட்டக்கழக பொறியாளர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்பிற்கு விண்ணப்பித்தவர்களுக்கு 6.7.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் மதுரை திருப்பாலை பெண்கள் கல்லூரி அருகே அமைந்துள்ள குறிஞ்சி திருமண மண்டபத்தில் நேர்காணல் நடைபெற உள்ளது.*

*இந்நிகழ்வில் ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.*




# தி.மு.க. இளைஞர் அணி

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 05.07.2025 சனிக்கிழமை | காலை 09.30 மணி | திண்டுக்கல் கிழக்கு | ஏ.எம்.எஸ்.மஹால், தாடிக்கொம்பு சாலை, திண்டுக்கல். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி.


# ‘மாண்புமிகு’ வென உயர்ந்து நிற்கும் நம் ஒப்பற்ற தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின்!

**‘SORRY’மா...**

இந்த வார்த்தைகளை மொபைல் ஸ்பீக்கரில் கேட்டதும் நெகிழ்ந்தோர் பலர், கண்களின் ஓரம் லேசாக கண்ணீர் சொரிந்தோர் பலர்!

என்னைப்போல கூடவே இருந்து பழகுகின்ற பெரும் வாய்ப்பைப் பெற்றவர்களுக்குத் தெரியும், அந்த வார்த்தைகளின் ஆழம், அதில் நெகிழ்ந் தோடும் ஈரம்.

அவை சம்பிரதாய வார்த்தைகள் அல்ல.

அதை நாங்கள் அறிவோம்.

அடடே ..நல்ல சான்ஸ் எதிர்க்கட்சி மிஸ் பண்ணிடுச்சி என அரசியல் ஓநாய்கள் ஓலமிட்டன. அச்சச்சோ ஆட்சிக்கு அவப்பேராகுமே என சிலர் அவதிப்பட்டனர்.

அரசைச் சார்ந்தவர்களால் தவறு நிகழ்ந்து விட்டது, யாரோ செய்த தவறுதானே, எனக்கென்ன என்றிருக்கவில்லை.

தட்டிக்கழிக்கவில்லை,

மூடி மறைக்கவில்லை.

முறையான விசாரணைகள் அதுவும் துரிதமாக. தயங்கவில்லை, தாமே முன்னின்றார், பொறுப்பேற்றார், நினைத்திருந்தால் என்ன வெல்லாமோ செய்திருக்கலாம்!

**வேறு யாராவது இந்த நாற்காலியில் இருந்திருந்தால் கையில் ஆட்சி, போலிஸ், இன்டெலிஜென்ஸ், அரசு இயந்திரம், ஐ.டி.விங், நேரேட்டிவ், செட்டிங் என என்ன வெல்லாமோ செய்திருப்பார்கள் !**

ஆனால் இவையனைத்தும் செய்ய முடியாத ஒன்றைச் செய்து,

“மாண்புமிகு”வென உயர்ந்து நிற்கிறார் திராவிட நாயகர், ஒப்பற்ற நமது முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின்.

தனியொருவராக இந்தப் பிரச்சினையை மிகச் சரியாக ஒரு முதிர்ந்த அரசியல் ஆளுமையாக, தமிழ்நாடு அவர் மீது வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைக்கும் பாசத்திற்கும் பாத்திரமாக, ஒரு ‘அப்பா’வாக... ஒரே ஃபோன் கால்! ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் மனசாட்சி உள்ள அனைவரும் நமது முதலமைச்சர் எப்படிப்பட்ட மகத்தான மனிதர், தலைவர் என்பதை முழுமையாகப் புரிந்து கொண்டனர்.

**He did not pass the responsibility. He Owned up to the mistakes of his**



**subordinates as a Responsible Leader and more importantly as a Human Being with a heart of gold.**

யாரோ செய்த தவறுக்கு இவர் எதற்கு மன்னிப்பு கேட்கவேண்டும் என்று பலர் என்னிடம் கேட்டனர்...யோசித்துப் பார்த்தேன்... பின்பு தெரிந்தது... ஏனென்றால் இவர் தலைமைப் பண்புகள் நிரம்பியுள்ள, மனசாட்சியுள்ள, மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள, ஒரு பொறுப்புள்ள முதலமைச்சர்.

பதவியை ‘பொறுப்பு’ என்று அழைக்கும் ஒரே முதலமைச்சர்.

ஆட்சி வரும், போகும், ஆனால் எந்நேரத்திலும் நியாயத்தின் பக்கம், ஜனநாயகத்தின் பாதுகாவலராக அடிப்படை உரிமைகளின் பக்கம், மனிதாபிமானத்தின் பக்கம், பாதிக்கப்பட்ட குடும்பத்தின் பக்கம் நின்றார் தமிழ்நாட்டின் முதலமைச்சர், எங்கள் பெருமைமிக்க தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்!

**‘ மாண்புமிகு’ சொல்லல்ல செயல்!**

**தலைவர் மு.க.ஸ்டாலின் - வாழ்க**


**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர்,
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர்






குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நேற்று முன்தினம் (2/7/2025) சென்னை நந்தனம் Startup TN அலுவலகத்தில், அக்டோபர் மாதம் 9, 10 ஆகிய நாட்களில் கோயமுத்தூரில் நடைபெறும் உலக புத்தொழில் மாநாடு 2025 முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் MSME அரசு செயலாளர் அதுல் ஆனந்த், Startup TN நிறுவனத்தின் செயல் அலுவலர் சிவராஜ் ராமநாதன் ஆகியோர் உள்ளனர்.